செ.வெ.எண். 27 நாள்: 13.08.2019

**(ஜல் சக்தி அபியான்) நீர்மேலாண்மை குறித்த அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம், மத்திய உணவு மற்றும் பொது வினியோக திட்ட துறைக்கான கூடுதல் செயலர் திரு.இ.கே.மஜ்ஹீ இ.ஆ.ப. (E.K.MAJHI . I.A.S.) அவர்கள் தலைமையில் இன்று (13.08.2019) நடைபெற்றது.**

**நீர் நிலைகள் தூர்வாரும் பணிகள் மற்றும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (ஜல் சக்தி அபியான்) நீர்மேலாண்மை குறித்த அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில், மத்திய உணவு மற்றும் பொது வினியோக திட்ட துறைக்கான கூடுதல் செயலர் திரு.இ.கே.மஜ்ஹீ இ.ஆ.ப. (E.K.MAJHI . I.A.S.) அவர்கள் தலைமையில் இன்று (13.08.2019) நடைபெற்றது.

**மத்திய உணவு மற்றும் பொது வினியோக திட்ட துறைக்கான கூடுதல் செயலர் திரு.இ.கே.மஜ்ஹீ இ.ஆ.ப. (E.K.MAJHI . I.A.S.) அவர்கள் பேசும்பொழுது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் (ஜல் சக்தி அபியான்) நீர்மேலாண்மை பணிகள் மத்திய மாநில அரசு மற்றும் அனைத்து துறைகள் சார்பாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜல் சக்தி நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏரிகள் தூர்வாரும் பணிகள் விரைந்து முடிக்க வேண்டும். தனி நபர் இல்லங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகள் எண்ணிக்கை அதிகப்படுத்த வேண்டும். மேலும் அனைத்து துறைகள், தொண்டு நிறுவனங்கள், பள்ளிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் இணைந்து மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

மேலும் நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு, ஏரிகுளங்கள் தூர் வாரும் பணிகள், வீடுகளில் கழிவு நீர் தொட்டி, குறித்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரங்களை ஜியோ டெக் இணைய தளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய வேண்டும். விவசாய நிலங்களில் பண்ணை குட்டை அமைக்க விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பண்ணை குட்டைகள் அமைத்திட வேண்டும். குடிமராமத்து திட்டத்தின் கீழ் 100- ஏரிகளும், 325 ஊராட்சிகளில் குளம் குட்டைகள் புதியதாக அமைக்கவும், சமூக மேம்பாட்டு நிதி உதவியின் கீழ் 150 ஏரிகள் தூர் வாரும் பணிகள் 1- மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என ஆய்வுக் கூட்டத்தில் கூடுதல் செயலர் அவர்கள் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.சாந்தி, மாவட்ட ஆட்சியர் நேர் முக உதவியாளர் (பொது) திரு.ராமமூர்த்தி, ஊரக வாழ்வாதார திட்ட அலுவலர் திருமதி.உமாமகேஸ்வரி, கோட்டாட்சியர்கள் திருமதி. வி.தெய்வநாயகி, திரு. குமரேசன், ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் திரு.ஆறுமுகம், துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி.எஸ்.சுகந்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.